பிரசார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4
10 06 2024 6 45
திங்கட்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. நாட்டின் பிரதமராக திரு.நரேந்திர மோடி 3வது முறையாக பதவியேற்றுள்ளார்.

2. நாட்டை வளர்ச்சியின் புதிய உயரங்களுக்கு கொண்டு செல்ல உறுதிபூண்டுள்ளதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

3. தமிழகத்தில் ஆக்கிரமிப்பில் இருந்த 6 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான கோவில் நிலங்கள் கடந்த 3 ஆண்டுகளில் மீட்கப்பட்டுள்ளதாக மாநில இந்து அறநிலையத்துறை அமைச்சர் திரு. சேகர் பாபு தெரிவித்துள்ளார்.

4. தமிழகத்தில் கோடை விடுமுறைக்குப் பின் பள்ளிகள் இன்று திறக்கப்படுகின்றன.

5. உலகக்கோப்பை ட்வெண்ட்டி ட்வெண்ட்டி கிரிக்கெட் போட்டியில் பாகிஸ்தானுக்கு எதிரான ஆட்டத்தில் இந்தியா 6 ரன் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

<u>*---- இனி விரிவான செய்திகள் ---*</u>

<<<<>>>>

நாட்டை வளர்ச்சியின் புதிய உயரங்களுக்கு கொண்டு செல்ல உறுதிபூண்டுள்ளதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

மூன்றாவது முறையாகப் பிரதமராகப் பதவியேற்ற பின் அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், இந்த புதிய அமைச்சரவை இளைஞர்கள் மற்றும் அனுபவம் வாய்ந்தவர்கள் என இருதரப்பினரின் சங்கமமாக உள்ளது என்று தெரிவித்துள்ளார்.

நாட்டு மக்கள் அனைவரது வாழ்க்கையையும் சிறப்பானதாக மாற்ற அனைத்து முயற்சிகளும் தொடர்ந்து மேற்கொள்ளப்படும் என்று அவர் தெரிவித்துள்ளார்.

இந்தியா எப்போதும் நட்பு நாடுகளுடன் இணைந்து மனிதகுலத்தின் நலனுக்காக பணியாற்றும் என்றும் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

<<<<>>>>

நாட்டின் பிரதமராக திரு நரேந்திர மோடி தொடர்ந்து மூன்றாவது முறையாக நேற்று மாலை பதவியேற்றார்.

புதுதில்லியில் குடியரசுத்தலைவர் மாளிகையில் நடைபெற்ற நிகழ்ச்சியில், குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு அவருக்கு பதவிப்பிரமாணம் செய்து வைத்தார்.

புதிய அமைச்சரவையில் 33 பேர் புதிதாக இடம்பெற்றுள்ளனர். மத்திய அமைச்சரவையில் பிஜேபியை சேர்ந்த 60 பேரும், கூட்டணிக் கட்சிகளைச் சேர்ந்த 11 பேரும் இடம்பெற்றுள்ளனர்.

கேபினட் அமைச்சர்கள் 30 பேரும், தனி பொறுப்புடன் கூடிய இணையமைச்சர்களாக 5 பேரும், இணையமைச்சர்களாக 36 பேரும் பதவியேற்றுள்ளனர்.

பிஜேபி மூத்த தலைவர்கள் திரு ராஜ்நாத் சிங், திரு அமித்ஷா, திரு நிதின்கட்கரி, டாக்டர் ஜெய்சங்கர், திரு பியூஷ் கோயல், திரு தர்மேந்திர பிரதான், திருமதி நிர்மலா சீதாராமன், திரு ஜெ பி நட்டா, திரு சிவ்ராஜ் சிங் சௌகான், திரு மனோகர் லால் கட்டார், டாக்டர் வீரேந்திர குமார், திரு பிரல்ஹாத் ஜோஷி, திரு கிரிராஜ் சிங், ...

... திரு ஜோதிர் ஆதித்ய சிந்தியா, திரு கிஷன் ரெட்டி, திரு கிரண் ரிஜிஜு, திரு சர்பானந்த சோனாவால் உள்ளிட்டோருக்கு கேபினட் அமைச்சர்களாக குடியரசுத்தலைவர் பதவி பிரமாணம் செய்து வைத்தார்.

மதச்சார்பற்ற ஜனதாதளம் கட்சியின் திரு ஹெச் டி குமாரசாமி, இந்துஸ்தானி அவாம் மோர்ச்சா கட்சியின் திரு ஜிதன்ராம் மாஞ்சி, ஐக்கிய ஜனதாதளத்தின் திரு ராஜீவ் ரஞ்சன் சிங், லோக்ஜன்சக்தியின் திரு. சிராக் பஸ்வான், தெலுகுதேசம் கட்சியின் திரு. ராம்மோகன் நாயுடு ஆகியோரும் கேபினட் அமைச்சர்களாக பதவியேற்றனர்.

பிஜேபியைச் சேர்ந்த திரு ராவ் இந்தர்ஜித் சிங், திரு ஜிதேந்திர சிங், திரு அர்ஜுன் ராம் மெக்வால், ஷிண்டே பிரிவு சிவசேனாவின் திரு பிரதாப் ராவ் யாதவ், ராஷ்ட்ரிய லோக்தள் கட்சியின்

தலைவர் திரு ஜெயந்த் சௌத்ரி ஆகியோர் தனிப்பொறுப்புடன் கூடிய இணையமைச்சர்களாக பதவியேற்றனர்.

டாக்டர் எல். முருகன், மீண்டும் இணையமைச்சராக பொறுப்பேற்றுள்ளார்.

கேரளாவைச் சேர்ந்த திரு சுரேஷ் கோபி, திரு. திரு ஜிதின் பிரசாத், திரு ஸ்ரீபத் நாயக், திரு பங்கஜ் சௌத்ரி, திரு நித்யானந்த் ராய், திரு கிஷன்பால், திரு சோமன்னா, திரு எஸ் பி சிங் பாஹல், திரு ராம்தாஸ் அத்வாலே, திரு ராம்நாத் தாக்கூர், திருமதி அனுப்பிரியா பட்டேல், திரு பெம்மசாணி சந்திரசேகர் உள்ளிட்டோர் இணையமைச்சர்களாக பதவியேற்றுள்ளனர்.

புதிய அரசு பதவியேற்பு நிகழ்ச்சியில், அண்டை நாடுகளை சேர்ந்த தலைவர்கள் மற்றும் இந்திய பெருங்கடல் பகுதி நாடுகளை சேர்ந்த தலைவர்களும் பங்கேற்றனர்.

தமிழக ஆளுநர் திரு. ஆர்.என். ரவி, மாநில பிஜேபி தலைவர் திரு. அண்ணாமலை உள்ளிட்டோரும் இந்நிகழ்ச்சியில் கலந்துகொண்டனர்.

<<<<>>>>

பிரதமராக மீண்டும் பதவியேற்றுள்ள திரு. நரேந்திர மோடிக்கு பல்வேறு தலைவர்கள் வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

தமிழக ஆளுநர் திரு. ஆர்.என். ரவி தெரிவித்துள்ள வாழ்த்துச் செய்தியில், வறுமையற்ற, நோயில்லாத தேசத்தைக் கட்டமைக்க 3வது முறையாக திரு. நரேந்திர மோடி தமது பயணத்தை மேற்கொண்டுள்ளதாகவும், தேசத்தின் நலனுக்கான அவரது முயற்சிகள் வெற்றியடையட்டும் என்றும் கூறியுள்ளார்.

தமிழக முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில், 3வது முறையாக பொறுப்பேற்றுள்ளதற்கு வாழ்த்து தெரிவிப்பதாக கூறியுள்ளார்.

அரசியல் சாசனத்தை நிலைநிறுத்தவும், கூட்டாட்சி தத்துவத்தை மேம்படுத்தவும் பிரதமர் செயலாற்றுவார் என நம்புவதாக திரு. மு.க. ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

தமிழகத்தில் கோடை விடுமுறைக்குப் பின் பள்ளிகள் இன்று திறக்கப்படுகின்றன.

அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் மாணவ – மாணவிகளுக்கு விலையில்லா பாடப் புத்தகங்களை இன்றே வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக பள்ளிக் கல்வித்துறை தெரிவித்துள்ளது.

இது தவிர புத்தகப் பை, காலணி, சீருடைகள், போன்றவையும் வழங்கப்பட உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே மாணவர்கள் தடையின்றி பள்ளிக்குச் செல்லும் வகையில் போதுமான பேருந்துகளை இயக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக போக்குவரத்துத்துறை தெரிவித்துள்ளது.

புதிய இலவசப் பேருந்து பயண அட்டைகள் வழங்கப்படும் வரை ஏற்கனவே உள்ள பழைய அட்டையைப் பயன்படுத்தி மாணவர்கள் பள்ளிக்குச் செல்லலாம் எனவும் போக்குவரத்துத்துறை கூறியுள்ளது.

<<<<>>>>

தமிழகத்தில் ஆக்கிரமிப்பில் இருந்த 6 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான கோவில் நிலங்கள் கடந்த 3 ஆண்டுகளில் மீட்கப்பட்டுள்ளதாக மாநில இந்து அறநிலையத்துறை அமைச்சர் திரு. சேகர் பாபு தெரிவித்துள்ளார்.

சென்னை திருவான்மியூரில் உள்ள பாம்பன் ஸ்வாமிகள் ஆலய குடமுழுக்கு விழா அடுத்த மாதம் 17ஆம் தேதி நடைபெற உள்ளதை ஒட்டி அதற்கான பணிகளை நேற்று அவர் தொடங்கி வைத்தார்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர், 3 ஆண்டுகளில் ஆயிரத்து 700க்கும் மேற்பட்ட ஆலயங்களுக்கு குடமுழுக்கு விழா நடத்தப்பட்டுள்ளதாக கூறினார்.

<<<<>>>>

தமிழகத்தில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் கலந்தாய்வு இன்று முதல் தொடங்குகிறது.

மாநிலத்தில் உள்ள 169 அரசு கலை, அறிவியல் கல்லூரிகளில் **B.Sc, B.A, B.Com** உள்ளிட்ட படிப்புகளில் பல்வேறு பிரிவுகளில் ஒரு லட்சத்து 7 ஆயிரம் இடங்கள் உள்ளன.

இவற்றுக்கு 2 லட்சத்து 58 ஆயிரம் விண்ணப்பங்கள் வந்துள்ளதாகவும், தரவரிசைப் பட்டியல் அடிப்படையில் மாணவர்கள் கலந்தாய்வுக்கு அழைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முதற்கட்ட கலந்தாய்வு வரும் 15ஆம் தேதி வரை நடைபெற உள்ளது.

வகுப்புகள் அடுத்த மாதம் 3ஆம் தேதி தொடங்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

தமிழகத்தின் சில இடங்களில் அடுத்த 4 நாட்களுக்கு அதிகபட்ச வெப்பநிலை இயல்பைவிட 2 முதல் 3 டிகிரி செல்சியஸ் வரை அதிகரிக்கக் கூடும் என சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இன்று ஓரிரு இடங்களில் லேசானது முதல் மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளதாகவும் அந்த மையம் தெரிவித்துள்ளது.

குமரிக் கடல் பகுதிகள், மன்னார் வளைகுடா மற்றும் தென் தமிழக கடலோரப் பகுதிகளில் மணிக்கு 35 முதல் 45 கிலோ மீட்டர் வேகத்தில் காற்று வீசக்கூடும் என்பதால் இப்பகுதிகளுக்கு வரும் 13ஆம் தேதி வரை மீனவர்கள் மீன்பிடிக்கச் செல்ல வேண்டாம் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

சென்னையைப் பொறுத்தவரை அதிகபட்ச வெப்பநிலை 37 டிகிரி செல்சியசை ஒட்டி நிலவக்கூடும் என்றும், நகரின் சில இடங்களில் லேசான மழை பெய்ய வாய்ப்புள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

தமிழகத்தில் நடப்பு கல்வியாண்டில் பொறியியல் மாணவர் சேர்க்கைக்கான விண்ணப்பப்பதிவு நாளை வரை நீட்டிக்கப்பட்டுள்ளதாக மாநில தொழில்நுட்ப கல்வி இயக்ககம் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக, வெளியிடப்பட்டுள்ள செய்திக்குறிப்பில், மாணவர்களின் கோரிக்கையை ஏற்று இந்த இரண்டு நாட்கள் நீட்டிக்கப்பட்டுள்ளதாகவும், இதுவரை விண்ணப்பிக்க தவறிய மாணவ, மாணவியர் புதிதாக **tneaonline.org** என்ற இணையதளம் வாயிலாக விண்ணப்பிக்கலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

கிருஷ்ணகிரி மாவட்டம் ஓசூர் அருகே உள்ள கெலவரப்பள்ளி நீர்தேக்க அணை பகுதிகளில் மத்திய நீர்வள ஆணைய தலைவர் திரு குஷ்விந்தர் வோஹ்ரா தலைமையில் 15 பேர் கொண்ட குழுவினர் இன்று ஆய்வு செய்தனர்.

கர்நாடக மாநிலம் நந்திமலையில் உற்பத்தியாகும், தென்பெண்ணை ஆற்றில் தொழிற்சாலைகளில் இருந்து வெளியேறும் ரசாயனக் கழிவுகளால் தண்ணீர் பாதிக்கப்பட்டுள்ளதாக புகார் எழுந்துள்ளது.

இந்த குழுவினர் அந்த தண்ணீரை கெலவரப்பள்ளி அணைப்பகுதியில் ஆய்வு செய்து அரசுக்கு அறிக்கை தர உள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

<<<<>>>>

*<u>இருவரிச் செய்திகள்</u>*

ஈரான் அதிபர் தேர்தலில் 6 பேர் போட்டியிடுகின்றனர்.

----------

27 நாடுகள் அங்கம் வகிக்கும் ஐரோப்பிய நாடாளுமன்ற தேர்தல் நேற்று நிறைவடைந்தது.

----------

கன்னியாகுமரி மாவட்டம் திற்பரப்பு அருவியில் நீர்வரத்து அதிகரித்துள்ளதை அடுத்து சுற்றுலாப் பயணிகள் குளிக்க தடை விதிக்கப்பட்டுள்ளது.

----------

சென்னையில் மேற்கொள்ளப்பட்ட சோதனையில் கஞ்சா உள்ளிட்ட போதைப் பொருட்கள் கடத்தியது தொடர்பாக 8 பேர் கைது செய்யப்பட்டு 17 லட்சம் ரூபாய் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாக மாநகர காவல்துறை கூறியுள்ளது.

----------

*<u>விளையாட்டுச் செய்தி</u>*

உலகக்கோப்பை ட்வெண்ட்டி ட்வெண்ட்டி கிரிக்கெட் போட்டியில் பாகிஸ்தானுக்கு எதிரான ஆட்டத்தில் இந்தியா 6 ரன் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

நியூயார்க்கில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் முதலில் விளையாடிய இந்தியா 19 ஓவரில் 119 ரன்னுக்கு ஆட்டமிழந்தது.

120 ரன் என்ற வெற்றி இலக்குடன் பின்னர் களமிறங்கிய பாகிஸ்தான், நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 7 விக்கெட் இழப்புக்கு 113 ரன் மட்டுமே எடுத்து தோல்வியடைந்தது.

நியூயார்க்கில் இன்று நடைபெறும் ஆட்டத்தில் பங்களாதேஷ் - தென்னாப்பிரிக்காவை எதிர்கொள்கிறது.

**<<<<The End>>>>**